கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு சுற்றறிக்கை: 04/2015

எனது இல: NP/10/03/COM/CIR/2015
கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு
வடக்கு மாகாண சபை
2015.04.29

வட மாகாணத்திலுள்ள அனைத்து கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் சமாசங்களின் தலைவர்கட்கும்

## விசாரணை உத்தியோகத்தர்களுக்கான பிரயாணப்படி

கூட்டுறவுச் சங்கங்களில் நடைபெறுகின்ற ஒழுக்காற்று விசாரணை, மேன்முறையீட்டு விசாரணைகளின் போது விசாரணை உத்தியோகத்தர்களாகக் கடமைபுரியும் உத்தியோகத்தர்களுக்கான பிரயாணப்படியாக இணைந்தபடி, விசேடபடி,போக்குவரத்துச் செலவு போன்ற படிகளைச் செலுத்தும்போது கீழ்வரும் நிபந்தனைகளுக்கு அமைவாக வழங்குவதற்கு வடக்கு மாகாண கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

1. இப் பிரயாணப்படி பின்வரும் நிலைமையின் போது மட்டுமே பொருத்தமுடையதாகும். குறித்த உத்தியோகத்தர் தனது வசிப்பிடத்திலிருந்து அல்லது சேவை நிலையத்திலிருந்து (கிட்டிய தூரம் எதுவோ அது) விசாரணைக்கென குறித்தொதுக்கப்பட்ட இடத்தை அடையவுள்ள தூரத்தினதும் மீள தனது வசிப்பிடத்திற்கோ அல்லது சேவை நிலையத்திற்கோ (அதே கிட்டிய தூரம்) திரும்பவுள்ள தூரத்தினதும் கூட்டுத்தொகை 11.2 km இற்கு மேற்பட்டிருத்தல் வேண்டும். இதற்குட்பட்ட பிரயாண தூரத்திற்கு படி எதுவும் வழங்கலாகாது.
2. இப் பிரயாணப்படி விசாரணை உத்தியோகத்தர்கள் தற்பொழுது பெறும் சம்பளம் அல்லது அவர்கள் இளைப்பாறியிருப்பின் ஓய்வு பெற்றபோது இறுதியாகப் பெற்ற சம்பளம் என்பவற்றின் அடிப்படையில் பின்வருமாறு கணிக்கப்படல் வேண்டும்.

| சம்பள அளவு | இணைந்தபடிகள் |
|---|---|
| ரூபா 15839/- இற்கு உட்பட்ட மாதச்சம்பளம் | ரூ.350/- |
| ரூபா 15840/- இற்கும் ரூபா 21044/- இற்கும் இடைப்பட்ட மாதச் சம்பளம் | ரூ.400/- |
| ரூபா 21045/- இற்கும் மேற்பட்ட மாதச் சம்பளம் | ரூ.500/- |

3. குறித்த கடமைக்காக பிரயாண நேரம் உள்ளடங்கலாக 6 மணித்தியாலம் தொடக்கம் 12 மணித்தியாலம் வரை செலவிடப்பட்டால் இணைந்த படியின் அரைவாசித் தொகையும் 12 மணித்தியாலத்திற்கும் 24 மணித்தியாலத்திற்கும் இடைப்பட்ட நேரம் செலவிடப்பட்டால் முழுத்தொகையும் 24 மணிநேரம் அல்லது அதனிலும் மேற்பட்டதாயின் இணைந்த படித்தொகையுடன் பொருத்தமுடைய இணைந்த படியின் 25% விசேட படியாகவும் வழங்கப்பட வேண்டும்.
4. இவ் விசாரணை உத்தியோகத்தர்கள் போக்குவரத்துச் செலவினை மீளப்பெறுவதற்கும் உரித்துடையவர்களாகின்றனர். இதற்காக மிகக் குறைந்த கட்டணம் அறவிடப்படும் போக்குவரத்து மார்க்கத்தினை தெரிவு செய்வதுடன், கட்டணம் செலுத்தப்பட்டதற்கான பற்றுச்சீட்டினையும் சமர்ப்பிக்க வேண்டும்.
5. ஒழுக்காற்று விசாரணை மற்றும் மேன்முறையீட்டு விசாரணை தொடர்பில் இப் பிரயாணப்படிக் கொடுப்பனவுகள் முறையே சங்கங்களாலும் கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு அலுவலகத்தாலும் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

2015.04.28 ஆம் திகதிய ஆணைக்குழுத் தீர்மானப்படியானது.

பொ.வாகீசன்
செயலாளர்
கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு
வடக்கு மாகாண சபை

பொ.வாகீசன்
செயலாளர்
கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு
வடக்கு மாகாணசபை